## உயிர்த் தியாகம் வேண்டாம்!

# இந்தித் திணிப்பை தமிழ்ப்பற்றால் வீழ்த்துவோம்!

### மே 17 இயக்க சிவா திலீபன் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!

**சென்னை, மார்ச் 20 -**

**மே 17 இயக்கத்தைச் சேர்ந்த சிவா திலீபன் இந்தி எழுத்து அழிப்புப் போராட்டத்தின்போது உயிர் நீத்தார். அவர் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட செய்தியில், இந்தித் திணிப்பை மதிநுட்பத்தாலும், மன உறுதியாலும், தமிழ்ப்பற்றாலும்தான் வீழ்த்த வேண்டும் என போராடுபவர்களை கேட்டுக் கொள்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.**

இது தொடர்பாக கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப் பதிவு வருமாறு :-

“இனி ஒரு உயிரும் போக வேண்டாம்! இந்தி எழுத்து அழிப்புப் போராட்டத்தின்போது உணர்ச்சிவயப்பட்டு இரயில் முன் பாய்ந்த சகோதரர் சிவா திலீபன் அவர்கள் தீவிர சிகிச்சை பலனளிக்காமல் உயிரிழந்தது மனதைக் கனக்கச் செய்கிறது.

மொழிப்போரில் நாம் ஈந்த உயிர்ப் பலிகள் போதும்! இனி ஒரு உயிரும் போகக் கூடாது! தொழில்நுட்பத்தின் உதவியால் பல புதுமையான, அமைதியான, பெரும் வீச்சு கொண்ட போராட்ட வழிமுறைகளைப் பெற்றிருக்கிறோம்!

இந்தித் திணிப்பை நம் மதிநுட்பத்தாலும் மனவுறுதியாலும் தமிழ்ப்பற்றாலும்தான் வீழ்த்த வேண்டும்! இப்போரில் நம் உயிர் வீழக்கூடாது. நம்மைப் போன்ற தமிழ் மறவர்கள் வீழ்ந்து போனால் தாய்த்தமிழ் எங்ஙனம் வாழும் எனச் சிந்தியுங்கள். நம் உணர்ச்சிகளைக் காட்ட வேறு வழிகள் உள்ளன, உயிர்த்தியாகம் வேண்டாம் என மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

சகோதரர் சிவா திலீபன் அவர்களை இழந்து வாடும் தோழர் திருமுருகன் காந்தி உள்ளிட்ட மே 17 இயக்கத்தினருக்கும் தமிழுணர்வு கொண்ட அவரது இரண்டு மகள்கள் மற்றும் துணைவியார் உள்ளிட்ட குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் உரித்தாக்குகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

## முதல்வர் மு.க.ஸ்டாலினின் மகத்தான திட்டங்களை மக்களிடம் எடுத்துக் கூறி

# விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் கழகத்தினர் கடுமையாக உழைத்து தேர்தல் பணியாற்றிடுவீர்!

### மாவட்டச் செயற்குழுக் கூட்டத்தில் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

*செஞ்சி, மார்ச் 20 -*

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் செய்த திட்டங்களை முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி பட்டியலிட்டு பேசியது 75 ஆண்டுகால அரசியல் வரலாற்றில்ஒரு வல்லமையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உருவாக்கி இருப்பதாக முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் ஆலோசனைக் கூட்டம் செஞ்சியில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் ப.சேகர் தலைமை தாங்கினார்.

மைலம் தொகுதி பார்வையாளர் கடலூர் இள.புகழேந்தி, மாவட்ட துணைச் செயலாளர்கள் ரவிக்குமார், அருணகிரி, அமுதா ரவிக்குமார், செயற்குழு உறுப்பினர்கள் நெடுஞ்செழியன், சீனிராஜ், மாவட்டப் பொருளாளர் ரமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

செயற்குழு உறுப்பினர் செஞ்சி ஒன்றியப் பெருந்தலைவர் விஜயகுமார் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் செஞ்சி மஸ்தான் பேசுகையில்,

நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தல் பணிகள் மேற்கொள்வது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அனைத்து மாவட்ட செயலாளர்களுடன் கூட்டம் நடத்தி பல்வேறு ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.முதலமைச்சரின் வழிகாட்டுதல்படி விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள செஞ்சி, மயிலம், திண்டிவனம் ஆகிய சட்டமன்ற தொகுதியில் தேர்தல் பணியாற்றுவது தொடர்பாகவும், கூட்டணி கட்சியினரை ஒருங்கிணைப்பது, பிரச்சாரங்களை மேற்கொள்வது, தி.மு.க. அரசின் திட்டங்களையும், சாதனைகளையும் கிராமங்களில் உள்ள ஒவ்வொரு வீடாக எடுத்துச் சென்று மக்களிடையே விளக்கி வாக்குச் சேகரிக்க வேண்டும். நமக்கு மிகப்பெரிய பக்க பலமே மகளிர்கள் தான். அந்த வகையில் மகளிருக்கு கழகத் தலைவர் கொண்டு வந்துள்ள சாதனைகளான மகளிர் விடியல் பயணம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, புதுமைப் பெண், மகளிர் சுய உதவி குழுவிற்கு கடன் உதவி போன்ற பொருளாதார ரீதியிலான பல்வேறு திட்டங்களை அறிவித்து முதலமைச்சர் செயல்படுத்தி உள்ளார். அது மட்டும் இல்லாமல் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தில் ஐந்தாயிரமும், தற்போது மாற்றுத்திறனாளிகள், முதியோர் உதவித்தொகை பெறுபவர்களுக்கு ரூ.2000 அறிவித்துள்ளார். இது போன்ற அனைத்து தரப்பு மக்களுக்கும் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி இருக்கிறார்.

மேலும் திராவிட மாடல் 2.0 ஆட்சியில் மகளிர் உரிமைத் தொகை ரூ.2000 ஆக வழங்கப்படும் கூறியுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மேலும் பல திட்டங்களையும் செயல்படுத்த உள்ளதாக தெரிவித்த முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நம் நாட்டு மக்களுக்கு செய்துள்ள சாதனைகளை கையில் குறிப்பு வைத்துக் கொண்டு படிக்கின்ற அளவிற்கு இன்றைக்கு முதலமைச்சர் அரசியல் உச்சத்தில் நிற்கிறது.

பேரறிஞர் அண்ணா கலைஞருக்கு பிறகு 75 ஆண்டுகள் அரசியலுக்கு பிறகு ஆட்சியின் சாதனைகளை எதிர்க்கட்சித் தலைவர் கையில் எடுத்துக் கொண்டு பேசுகின்ற ஒரு வல்லமையை உருவாக்கி இருக்கிறார் என்றால் ‘ஸ்டாலின் தொடரட்டும்; தமிழ்நாடு வெல்லட்டும்’ என்ற வகையில் முதலமைச்சரின் திட்டங்களையும் முதலமைச்சர் தெரிவித்துள்ள வாக்குறுதிகளை மக்களிடம் கொண்டு சேர்த்து செஞ்சி, மயிலம், திண்டிவனம் ஆகிய தொகுதிகளில் தி.மு.க. வெற்றிக்கு அனைத்து நிர்வாகிகள், கழகத்தினர்கள் கடுமையாக உழைத்து தீவிரமாக தேர்தல் பணியாற்ற வேண்டுமென அவர் கேட்டுக் கொண்ட அவர் அவர் வாய் சொல் தலை சொல் என்பார்கள் இன்றைக்கு முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகத்தின் பேச்சு இப்படித்தான் ஆகியிருக்கிறது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மக்களின் கனவு என்ன என்று கேட்டு முடித்ததை செயல்படுத்துவதற்கு உங்கள் கனவை சொல்லுங்கள் என்ற திட்டத்தை அறிவித்தார். இத்திட்டத்தை முன்னாள் அமைச்சர் சி.வி. சண்முகம் என்ன பேசினார் என்பது எல்லோருக்கும் தெரியும். தாய், மனைவி, மகள் பெண்கள் என்பதை மறந்து விட்டு பேசி இருக்கிறார். நடைபெறுகின்ற தேர்தலில் பெண்கள் முன்னாள் அமைச்சர் சி.வி. சண்முகத்திற்கு தக்க பதில் சொல்வார்கள். செஞ்சி மயிலம் திண்டிவனம் ஆகிய தொகுதிகளில் நாம் வெற்றி பெறுவது நிச்சயம். ஆனால் வெற்றி வித்தியாசம் அதிகமாக இருக்க வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேதுநாதன், செந்தமிழ்ச்செல்வன், தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, பொதுக்குழு உறுப்பினர்கள் கதிரேசன், மணிவண்ணன், வீடூர் ரவி, சாந்தி ஏழுமலை, ஒன்றியச் செயலாளர்கள் அண்ணாதுரை, மொடையூர் துரை, இளம்வழுதி, ராஜாராமன், மணிமாறன், செழியன், விஜயராகவன், பச்சையப்பன், தயாளன், பழனி, ரவிச்சந்திரன், சாந்தி சுப்பிரமணியன், நாராயணமூர்த்தி, திண்டிவனம் நகரச் செயலாளர் ஆசிரியர் கண்ணன், அனந்தபுரம் நகரச் செயலாளர் சம்பத், திண்டிவனம் நகர மன்றத் தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், செஞ்சி பேரூராட்சி மன்றத் தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், அனந்தபுரம் பேரூர் தலைவர் முருகன், செஞ்சி துணைச் சேர்மன் ஜெயபாலன், அணி அமைப்பாளர்கள், பிரசன்னா, திலகவதி, ராஜசக்தி, கே.அன்சாரி, திருமலை, எஸ்.விஜயராகவன், சிவகாமி, தமிழரசன், ரோமியன் உள்ளிட்ட மாநில மாவட்ட ஒன்றிய, நகர, பேரூராட்சிக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

செஞ்சி நகரச் செயலாளர் கார்த்திக் நன்றி கூறினார்.



திருப்பூர் மத்திய மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் து.கோபிநாத், மாநகர மாணவர் அணி அமைப்பாளர் செ.திலகராஜ், எஸ்.மகேஷ்குமார் ஏற்பாட்டில் மாற்றுக்கட்சிகளைச் சார்ந்த 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். இதில் தெற்கு மாநகரச் செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், பகுதிப் பொறுப்பாளர் க.ஈஸ்வரமூர்த்தி, வட்டச் செயலாளர்கள் பர்னிச்சர் செந்தில், ராஜேந்திரன், திருநாவுக்கரசு உள்பட மாவட்ட, மாநகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள். துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட மாடல் ஆட்சி 2.0:

# மாவட்டக் கழகத்தின் ஒத்துழைப்புடன் வார் ரூம் (FIREWALL) பணிகளை வேகப்படுத்துவீர்!

DMK IT WING

### தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி மாநிலச் செயலாளர் – அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு!

திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைந்திட நம் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கழக மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் வழங்கியுள்ள அறிவுரைகளை நிறைவேற்றும் வகையில், தேர்தல் பணிகள் தொடர்பாக ஒன்றிய - நகர - பேரூர்க் கழக நிர்வாகிகளுடன் மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைகளை நடத்தி, பணிகளை விரைவுபடுத்தி வருகிறார்கள். கழகத் தகவல் தொழில்நுட்ப அணியின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் அவரவர் மாவட்டக் கழகச் செயலாளர்களிடம் உரிய நேரம் பெற்று, அணி நிர்வாகிகளுடன் நேரில் சந்தித்து தேர்தல் பணிகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும். முக்கியமாக, மாவட்டக் கழகத்தின் ஒத்துழைப்புடன் வார் ரூம் (Firewall) பணிகளை வேகப்படுத்த வேண்டும்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை

**அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா**
**செயலாளர், தகவல் தொழில்நுட்ப அணி தி.மு.க.**

## கழக சட்டத்துறை வார் ரூம் அலுவலகத்துடன் இணைந்து பணியாற்றிட

# புதுச்சேரி மாநிலத்தின் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் ஒரு வார்ரூம்!

DMK IT WING

### கழக தகவல் தொழில் நுட்ப அணிச் செயலாளர் – அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு!

**புதுச்சேரி மாநில தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் கவனத்திற்கு**, புதுச்சேரியில் கடந்த **3 முறை** நாம் நடத்திய சந்திப்புகளில், அணியின் சார்பில் மேற்கொள்ள வேண்டிய **கழகப் பணிகள் குறித்து விரிவாக ஆலோசனைகள்** மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், **புதுச்சேரி மாநிலத்தின் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் ஒரு வார் ரூம்** (Firewall) **அமைத்தல்** மிகவும் அவசியமானதாகும், இந்த வார் ரூம்கள், **அறிவாலயத்தில் அமைந்துள்ள கழக சட்டத்துறை வார் ரூம் அலுவலகத்துடன் இணைந்து பணியாற்றி**, தமிழ்நாட்டின் **திராவிட மாடல் அரசின் மகத்தான சாதனைத் திட்டங்கள்** நமது கூட்டணி மூலமாக புதுச்சேரி மக்களுக்கும் கிடைத்திடும் வகையில் வெற்றிக்கானப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்

**அண்ணா அறிவாலயம்**
சென்னை
நாள் : 19.3.2026

**முனைவர் டி.ஆர்.பி.ராஜா**
செயலாளர்
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி

## தமிழ்நாடு – புதுச்சேரி சட்டப்பேரவை பொதுத்தேர்தல் – 2026

# தி.மு.க. வேட்பாளர்கள் நேர்காணல்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

**தமிழ்நாடு – புதுச்சேரி சட்டப்பேரவை பொதுத் தேர்தலுக்கு போட்டியிட விரும்பி தலைமைக் கழகத்திற்கு விண்ணப்பம் செலுத்தியவர்களை கழகத் தலைவர் அவர்கள் 17–03–2026 முதல் 22–03–2026ஆம் தேதி வரை, பின்வரும் மாவட்ட வாரியாக சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நேர்காணல் வாயிலாக சந்தித்து தொகுதி நிலவரம் வெற்றி வாய்ப்புகள் குறித்து ஆராய்ந்து அறிந்திட இருக்கிறார்கள்.**

**குறிப்பிட்டுள்ள தேதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்டக் கழகச் செயலாளர் மட்டும் வரவேண்டும். மாவட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் ஒன்றிய, நகர, பகுதிக் கழகச் செயலாளர்கள் வரவேண்டிய அவசியமில்லை. வேட்பாளர்கள் தங்களுக்கான ஆதரவாளர்களையோ, பரிந்துரையாளர்களையோ அழைத்து வரக்கூடாது என்றும், அவர்களையும் ‘அவர்களுக்காக விருப்ப மனு’ செலுத்தியோரையும் நேர்காணலுக்கு கண்டிப்பாக அனுமதிக்க இயலாது என்றும் தெரிவிக்கப்படுகிறது.**

### மாவட்ட வாரியாக நேர்காணல் நடைபெறும் நாள் விவரம்

| நாள் – கிழமை | நேரம் | மாவட்டம் |
|---|---|---|
| மார்ச் 20 வெள்ளி | காலை 9.00 மணி | இராணிப்பேட்டை, வேலூர் வடக்கு, வேலூர் தெற்கு, திருப்பத்தூர், திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு, |
| ,, ,, ,, | மாலை 4.00 மணி | தர்மபுரி கிழக்கு, தர்மபுரி மேற்கு, சேலம் மத்திய, சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு. |
| மார்ச் 21 சனி | காலை 9.00 மணி | திருச்சி வடக்கு, திருச்சி மத்திய, திருச்சி தெற்கு, தஞ்சை வடக்கு, தஞ்சை தெற்கு, தஞ்சை மத்திய, பெரம்பலூர், அரியலூர் |
| ,, ,, ,, | மாலை 4.00 மணி | புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு, கடலூர் மேற்கு, மயிலாடுதுறை நாகப்பட்டினம், திருவாரூர் |
| மார்ச் 22 ஞாயிறு | காலை 9.00 மணி | கடலூர் கிழக்கு, விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் மத்திய, விழுப்புரம் தெற்கு, காஞ்சிபுரம் தெற்கு. |
| ,, ,, ,, | மாலை 4.00 மணி | திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மத்திய, திருவள்ளூர் மேற்கு, காஞ்சிபுரம் வடக்கு, சென்னை வடக்கு சென்னை வடகிழக்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு, சென்னை மேற்கு, சென்னை கிழக்கு |

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை – 18.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.